R 5410 (page 67)

# இன்றைய நாளின் சூழ்நிலைகளில் அர்ப்பணித்தல்

## CONSECRATION AS RELATED TO PRESENT-DAY CONDITIONS

பரிசுத்தமாகுதலுக்கான மற்றொரு பெயர் அர்ப்பணித்தல், இது பிரிந்திருத்தலை அடையாளப்படுத்துகிறது. பரிசுத்தமாகுதலும் அர்ப்பணித்தலும் நீதிமானாக்கப்படுதலோடு நெருக்கமான தொடர்புடையது. ஏனெனில் ஒருவர் பாவத்திலிருந்து தேவனிடத்திற்கு திரும்பி வரும்போது, பகுதியளவு நீதிமானாகுதல் நிகழ்ந்தாலும், அந்நபர் முழு அர்ப்பணிப்பு செய்யும்அந்த நேரம் வரும்வரை அங்கே ஜீவனுக்கேதுவான முழுமையான நீதிமானாகுதல் நிகழ்வதில்லை. ஆகவே ஒருவர் பாவத்திலிருந்து விலகி, தேவனை நோக்கி தன் பயணத்தை ஆரம்பிக்கும் நேரம் துவக்கி, தேவசித்தத்தை அறியவும் செய்யவும் தேடும்போது, அங்கே குறிப்பிட்டஅளவு அர்ப்பணிப்பு நிகழ்கிறது,தேவனுக்கென பிரிந்திருத்தல் நடைபெறுகிறது. தீமையைப் பின்பற்றுவதிலிருந்து மாறுபட்ட பண்பு துவங்குவதாக அங்கே தோற்றமளிக்கிறது. தே வனை நோக்கிவளர ஒருவர் எடுக்கும் படியானது, அது பரிசுத்தமாகுதல் மற்றும் நீதிமானாக்கப்படுதலுக்கான படியாகும்.

இதனை விளக்க, நிழலில் கூறப்பட்டுள்ள ஒரு சித்திரத்தை நாம் திரும்பிப் பார்ப்போம். விருப்பத்தோடு ஆசரிப்புக்கூடாரத்தை நெருங்கும் ஒரு லேவியர் அல்லது ஒரு ஆசாரியரை நாம் கவனிக்கும்போது, பிரகாரத்தை சுற்றிலுமுள்ள வெண்மை சுவரை தூரத்திலிருந்தே உணர்ந்து கொள்கிறார். தான் நெருங்கி சேர்கிற அதன் உள்ளே என்ன இருக்கிறது என்று ஓரளவு அறிவையே அவர் அடைந்து, அவர் வாசலை அடையும்பொழுது, பிரகாரம் என்பது ஒரு பரிசுத்தமான இடம் என்றும், உள்ளேயிருக்கும் வெண்கல பலிபீடத்தில் செலுத்தப்படும் பலியைப் புரிந்து ஏற்றுக்கொள்ளும்வரை, மறைக்கப்பட்ட அவ்விடத்திற்குள் எவ்விதத்திலும் யாரும் நுழையமுடியாது என்றும் புரிந்துகொள்கிறார்.

### நீதிமானாக்கப்படுதல் மற்றும் பரிசுத்தமாக்கப்படுதலில் முன்னேற்றம்

ஓரளவு அர்ப்பணம் செய்தநிலையிலுள்ள நபர், ஓரளவு நீதிமானாக்கப்பட்ட நிலையில் உள்ளார். நிரகார வாசலில் நின்று, அவர் கற்கவேண்டிய பெரிதான பாடம் – தான் ஒரு பாவி என்பதையே, தேவன் பாவிகளை ஏற்கமாட்டார், கொடுக்கப்பட்ட மாபெரும் பலியை ஏற்றுக்கொண்டால் மட்டுமே அவரது அங்கீகாரம் பெறும் என்று உணர்ந்து, அவரை அணுகுவோர் மட்டுமே அவரால் ஏற்கப்படுவர். பலியை புரிந்துகொண்டபிறகு, பாவத்திலிருந்து நீதிமானாக்கப்படுவதற்கு கிறிஸ்துவின் மரணத்தின்மேல் நம்பிக்கையாயிருத்தல், இவற்றைப் புரிந்துகொண்டபிறகு, அவரது அடுத்த படிக்கல் ஆழமான அர்ப்பணிப்பு செய்தலாகும். இதன் மூலமாக முழு நீதிமானாகுதலை அடையலாம். அதை அவன் நடைமுறைப்படுத்துகையில், பிரகாரத்தின் தாமிரத் தண்ணீர்த்தொட்டிக்கு அவனைக் கொண்டுவந்து சேர்க்கிறது. மாம்சத்தின் அசுசிகளை கழுவிப்போக்குவதை இந்நிலைமை குறிக்கிறது. பாவத்திலிருந்து தன்னை விடுவிக்க தன் எல்லா வல்லமையையும் பிரயோகித்து, ஜீவியத்தில் அதிகதிகமாக தூய் மையடைவான். தேவனால் இதுவும் ஏற்றுக்கொள்ளப்படும்.

R5411 : page 67

ஆயினும் அவன் இன்னும் முழுமையாக நீதிமானாக்கப்படவோ, முழுமையாக பரிசுத்தமாக்கப்படவோ இல்லை. அவன் தொடர்ந்து முன்னேறி, தேவனிடத்தில் இன்னும் நெருங்கிச் சேர்வதற்கு ஊக்கத்துடன் விரும்புகிறான், ஆசரிப்புக் கூடாரத்தின் கதவண்டையில் வந்துசேர்கிறான். அங்கே தன் மனித சித்தத்துக்கு மரித்தலாகிய மரணத்தின் மூலம் முன்னேறுவது ஒன்றே வைக்கப்பட்டிருப்பதை அவன் கண்டடைகிறான்.அவனது மனித உரிமைகள் மற்றும் ஆர்வங்கள் அனைத்தையும் இதில் ஒப்புவிக்கவேண்டும். மேலும் இந்த மரணம் பலிக்குரிய தியாக மரணமாக இருப்பதையும் பிரதான ஆசாரியரால் தான் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவனது முழு அர்ப்பணிப்பை பரலோகப்பிதா ஏற்குமுன்பாக, அவனது அபூரணங்களை பிரதான ஆசாரியர் தம் புண்ணியத்தை அருளுவதன் மூலம் பூரணமாக்கப்படவேண்டியதன் அவசியத்தை அவன் புரிந்துகொள்கிறான்.

ஆகவே ஜீவனுக்கான நீதிமானாக்கப்படுதல் நிகழ்வதற்கு முன்னரே அவனது அர்ப்பணிப்பு(consecration) நிகழ்கிறது. இயேசு அவனை ஏற்றுக்கொள்வதற்கு முன்னரே அவன் தன்னை பலியாக ஒப்படைக்கவேண்டும், அவரது அங்கங்களில் ஒருவனாகும்படி, பிதாவின் முன்பாக அவன் தன்னை ஒப்புக்கொடுக்கவேண்டும். இது கிறிஸ்துவின் பூமிக்குரிய சரீரத்தில் உறுப்பினர் நிலையாக இருந்து, துன்பப்பட்டு, மரித்து, ஆவிக்குரிய சரீரத்தில் ஜீவன் மற்றும் மகிமை பெறும் உறுப்பினர் நிலையை அடைகிறான். அவனது

அர்ப்பணிப்பானது முத்திரையிடப்படுதல் , பரிசுத்தஆவியில் ஜெனிப்பிக்கப்பட்டதற்கான அறிகுறியாக இருந்து, தெய் வீக அங்கீகாரம் பெற்றதைக் காட்டுகிறது. தேவனுடைய ஆழமான காரியங்களை புரிந்துகொள்வதன் மூலம், அவன் பரிசுத்தஆவியில் ஜெனிப்பிக்கப்பட்டிருப்பதன் அறிகுறியாக தெரிகிறது. இதை பரிசுத்தஸ்தலத்திலுள்ள சமூகத்து அப்பமேஜை மற்றும் நறுமணதூபபீடம்அடையாளமாகக் காட்டுகிறது. பெற்றுக்கொண்ட இந்த அறிவின்மூலம் செதுக்கப்படுதல், பளபளப்பாக்கப்படுதல் மற்றும் ஊழியம் செய்யும் வாய்ப்புக்களையும் அனுபவங்களாக அடைகிறான்.சில விஷயங்களில் இந்த பல்வேறு படிகள் பெரும்பாலும் ஒரே சமயத்தில் நிகழ்கின்றன.

தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டபிறகு, தடைகள் நேரிடினும் விடாப்பிடியாக அர்ப்பண வாழ்வை சீராக காத்துக்கொள்ளவேண்டும். தேவனுடைய சுதந்திரராகவும், நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரராகவும், திரைக்கப்பால் ராஜரீக ஆசாரியக்கூட்டத்தில் பங்குபெறவேண்டுமானால், நாம் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கவேண்டும். நாம் தற்கால ஜீவியத்தில் அவரோடுகூட துன்புற்றால் பின்னர் மகிமையில் நாம்அவரோடுகூட ஆளுகை செய் வோம்.

## 1881ம் ஆண்டிலிருந்து அர்ப்பணிப்பவர்கள்

1881இலிருந்து அர்ப்பணித்தவர்களில் ஒரு நபரிடமாவது, அவரது அர்ப்பணிப்பு தேவனால் ஏற்கப்பட்டதற்கு என்ன சாட்சியம் வைத்திருக்கிறார்? ஏதாகிலும் சாட்சியம் இருக்கிறதா? என்று சிலர் அக்கறையோடு வினவுகின்றனர். இதனைக் குறித்து நாம் கூறவிரும்புவது; எவ்வளவு சமீபத்தில் அந்நபர் அர்ப்பணிப்பை ஏற்படுத்தியிருந்தார் என்பதை சார்ந்தே உள்ளது. சற்றுமுன்பாக இருப்பின், அவரால் நிச்சயமாக தீர்மானிக்க முடியாது, ஒரு வருடம் அல்லது இரண்டு வருடங்கள் கடந்திருந்தும், பரிசுத்த ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்டதற்கான சாட்சியங்களை அடையாதிருக்கிறாரா? அதாவது, சத்தியத்தைப் புரிந்துகொள்ளவும், மதிப்பிடவும்கூடிய ஆற்றல் அடையாதிருக்கிறாரா? சத்தியத்தை நேசிக்கவும், அதற்கு ஊழியம் செய் யும் விருப்பத்தை அனுபவமாக அவர் பெற்றிருக்கவில்லையா ; சத்தியத்துக்கு ஊழியம்செய்யும் சில வாய் புக்களையும், சில சோதனையின் அனுபவங்களையும் அவர் கண்டடைந்திருக்காவிடில், இப்படிப்பட்ட நபரது அர்ப்பணிப்பு தெய் வீக அங்கீகாரத்தை பெற்றிருக்கிறதா என்று ஐயப்பட நாம் காரணத்தை வைத்திருக்கிறோம்.

அப்படி இருக்குமானால், அந்த அர்ப்பணிப்பு முறையாக செய்யப்பட்டிருந்ததா என்று நாம் ஆச்சரியப்பட, மனதை ஒருபுறம் திருப்புகிறோம். தேவன் ஏதாவது ஒரு வழியில் ஒவ்வொரு அர்ப்பணிப்பையும் ஏற்றுக்கொள்கிறார் என்பதே நமது சிந்தையாயுள்ளது, நறுங்குண்டு நொருங்குண்ட இருதயத்தை அவர்

**R5411 : page 68**

இழிவாகக் கருதுவதில்லை. முற்காலங்களில் தங்கள் ஜீவியத்தை அவருக்கு தத்தம் செய் த தீர்க்கதரிசிகள் மற்றும் உண்மையுள்ள மாம்ச இஸ்ரயேலரை அவர் இழிவாகக் கருதவில்லை. அவர்கள் வெறுக்கப்படவுமில்லை, நிந்திக்கப்படவுமில்லை. தேவனை அவர்கள் பிரியப்படுத்தினதாக சாட்சியம் பெற்றிருந்தனர்(எபி 11:5). ஊழியம் செய் யும் வாய் ப்புக்களை அவர்கள் கண்டடைந்தனர். அவர்கள் தங்களது கீழ்ப்படிதலுக்கும், அவர்கள் செலுத்தின எல்லா பலிகளுக்கும் விசேஷ ஆசீர்வாதத்தை வெகுமதியாகப் பெற்றனர். ஆனால் அவர்கள்பரிசுத்தஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டிருந்ததாக இதற்கு பொருளாகாது.

தற்காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டோரின் எண்ணிக்கை இன்னும் நிறைவடையவில்லை என்பதற்கு நாம் ஒவ்வொரு காரணங்களையும் பெற்றுள்ளோம். ஏனெனில் கொடுக்கப்பட்டவைகளில் அநேகரது கிரீடங்கள் இழக்கப்பட்டிருக்கின்றன. உள்ளே நுழைகிறவர்களில் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான ஆதாரத்தை சிலர் நாளுக்கு நாள், வாராவாரம் கொடுப்பதை நாம் கண்டுவருகிறோம். அவர்களது ஜீவியத்தை அவரது ஊழியத்துக்காக ஒப்புக்கொடுக்க கர்த்தர் அனுமதித்திருப்பதற்கு அவர்கள் சாட்சியமளிக்கின்றனர். ஆனால் வெகுசீக்கிரம் தெரிந்துகொள்ளப்பட்டோரின் எண்ணிக்கை பூர்த்தியடையும் நேரம் சந்தேகத்திற்கிடமின்றி வரவிருக்கிறது. அப்பொழுது மட்டுமே, விழுந்துபோனவர்களது காலியிடங்கள் இன்னும் மீதமிருப்பது அறியப்படும். அப்படிப்பட்ட நிகழ்வு நேரிடும்போது, வீழ்நச்சியடைந்தவர்களின் இடத்துக்கு, தேவன் அர்ப்பணிக்கும் மனப்பான்மையுள்ளோரில் சிலரை ஏற்றுக்கொள்வார். இவர்கள் பரிசுத்தஆவியின் ஜெனிப்பிக்குதலை அடைந்து, சத்தியத்துக்கு ஊழியம்செய்யவும், சத்தியத்தினிமித்தமாக துன்புறும்

வாய்ப்புக்களையும் கண்டடைவார்கள். தெரிந்துகொள்ளப்பட்ட எண்ணிக்கையில், இன்னும் சில காலியிடங்கள் இருப்பதை தடயங்கள் காண்பிக்கின்றன. ஏனெனில் உலகிலிருந்து நேரடியாக தற்கால சத்தியத்துக்குள் ஜனங்கள் இப்போதும் வந்து, தங்களை அர்ப்பணிக்கின்றனர். 1,44,000 எண்ணிக்கையானது நிறைவடைய முழுமையாக அர்ப்பணித்தவர்கள் தற்போது போதுமானஅளவு இல்லை என்று இது அறிவுறு த்துவதாகத் தோன்றுகிறது. அவ்வாறு போதுமான அளவு அர்ப்பணிக்கப்பட்டோர் இருந்திருப்பார்களானால், தங்களை பிரதிஷ்டைக்கு உட்படுத்தாதோரைக் காட்டிலும் இவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

## சராசரி கிறிஸ்தவனின் தற்போதைய நிலைமை

கிறிஸ்தவ மண்டலம் முழுவதும் இன்றைக்கு, பெரிதான எண்ணிக்கையுடையோர், அர்ப்பணிப்பின் படியை பெரிய அளவிலோ அல்லது சிறிய அளவிலோ , ஓரளவு புத்திக்கூர்மையுடன் எடுத்திருப்பதாக தோற்றமளிக்கிறது. இதில் சிலர், மீட்பரையும் அவரது இரட்சிப்பின் பணியின் அவசியத்தையும், பாவத்தை சரிக்கட்டுவதற்கு தம் ஜீவனை அவர் கையளித்தார் என்றும் உணர்ந்திருக்கின்றனர். சிலர் இன்னும் கூடுதலாக, ஓரளவு புத்திக்கூர்மையோடு, “தண்ணீர்த் தொட்டியில்” தங்களை சுத்திகரித்தனர்.

ஆனால் பெரும்பாலானோர் இன்னும் கூடுதலான நிலைக்கு செல்லவில்லை என்று தோற்றமளிக்கிறது. ஏனெனில் இன்னும்மேலான நிலையின் தகுதியுடைமையை அவர்கள் காணவில்லை. கிறிஸ்தவ ஜனங்களில் பெரும்பாலானோர் இன்றைக்கு, ஒழுக்கஜீவியத்தைத் தவிர எந்தகூடுதலான நிலைக்கும் செல்ல விரும்புவதில்லை. அவர்கள் தேவனிடத்தில் அர்ப்பணிக்கும் எல்லையை வந்தடையவில்லை. இதன் காரணமாக, உயிர்த்துடிப்பான நீதிமானாக்குதலின் நோக்கத்தை அவர்கள் அடையவில்லை. பெரும்பாலானோர் ஒருவேளை, தண்ணீர்த்தொட்டியண்டை வந்தடைந்து, தங்களைக் கழுவி தூய்மைப்படுத்த விரும்புகிறார்கள்.

இப்படிப்பட்டவர்கள் தற்போது வெளியரங்கமாகிவருகிற ராஜ்யத்தின் செய்தியை கற்கிறார்கள். அதன்படி, இயேசுவின் பின்னடியார்களாக வருபவர்களுக்கான ஒரே நிபந்தனை – மரணபரியந்தமான முழு அர்ப்பணிப்பு என்று அறிந்து, அவர்களில் சிலர் இந்த அறிவில் பலனடைய தங்களை மகிடிநச்சியோடு ஒப்புவிக்கிறார்கள். முழு அர்ப்பணிப்பு மற்றும் முழு நீதிமானாக்குதலை அடையும்பொருட்டு, அவர்கள் மகிடிநச்சியுடன் முன்னோக்கிச் செல்கிறார்கள். இவர்கள் தங்கள் சூடிநநிலையை பகுத்தறிவுடன் கண்ணோக்குகையில், பல்வேறு சபைப்பிரிவுகளிலுள்ள பெரும்பாலானோர், தங்களை கிறிஸ்தவ ஜனங்கள் என்று உரிமை பாராட்டுவோர் தங்களை முந்தி செல்வதற்கு பதிலாக, தேர்ச்சியடைதலில் பின்தங்கியிருப்பதை விநோதமாக இவர்கள் பார்க்கின்றனர். கிறிஸ்துவோடுகூட உடன் சுதந்திரராகப் போகிறவர்களிடம் தேவன் இந்த விநோதத்தன்மையையே எதிர்பார்க்கிறார் என்பதை பெரும்பாலானோர் புரிந்துகொள்ள மாட்டார்கள். இந்த விநோதமானவர்கள், தேவபக்தி மற்றும் உண்மையாயிருத்தலின் வழிகளில் நடந்து, அவரது மகிமைநிறைந்த ராஜ்யத்தில், கிறிஸ்துவோடு ஆளுகை செய்யும் தகுதி பெறுவார்கள்.

## திரள்கூட்டம்

. வேதாகமத்தில் திரள்கூட்டம் என்று அழைக்கப்படுகிற இந்த வகுப்பார், மாபெரும் உபத்திரவத்தில் அகப்பட்டு, ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் தங்கள் ஆடைகளை கழுவி, தூய்மையாக்கிக்கொண்டு, அந்த உபத்திரவத்திலிருந்து வெளியே வந்தவர்கள்(வெளி 7:14). இவர்கள் நிஜமான லேவியர்களின் ஸ்தானத்திற்கு இறுதியில் தகுதிபெறுவர். இவர்கள் தெய்வீக அங்கீகரிப்பைப்பெற்று, பரிசுத்தஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு, முழு அர்ப்பணிப்பின் பல்வேறு படிகளைக் கடந்திருந்தார்கள். அவர்கள் கிறிஸ்துஇயேசுவுக்குள் புதுசிருஷ்டிகளாகி, பரிசுத்தஸ்தலத்திற்குள் நுழைந்தார்கள். ஆனால் வைராக்கியத்தின் விஷயத்தில் குறைவுபட்டதினாலும், நீடித்து உழைக்கும் திறனை இழந்ததாலும், பாபிலோனில் அவர்களுக்கு தயவற்ற சூழ்நிலை இருந்ததாலும், இவர்கள் முன்னேறுவதில் தோல்வியடைந்தனர். பரலோகத்துக்குரியவைகளை ஆதாயமாக்க உள்ள ஒரே நிபந்தனையாகிய, பூமிக்குரிய காரியங்களை முழுமையாக பலிசெலுத்துவதில் தோல்வியடைந்தோராக காணப்பட்டனர்.

இவர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுவதிலும், அதேசமயம் இவ்வுலக செல்வங்களைப் பின்பற்றுவதிலும் நாட்டங்கொண்டிருந்தனர். கர்த்தரைப் பிரியப்படுத்தத் தேடின இவர்கள் உலகைப் பிரியப்படுத்தவும் தேடினர், கர்த்தருடைய ஆவியில் சிலவற்றையும் உலகத்தின் ஆவியில் சிலவற்றையும் பெற்றிருந்தனர், பொதுவாக முன்னேற்றமடையாமலும் கோபம், வெறுப்பு, பொறாமை, சண்டை, தீயனபேசுதல் போன்ற மாமிசத்துக்குரியவைகளை விட்டுவிடாமலும், மாம்சம் மற்றும் சாத்தானின் கிரியைகளை விட்டுவிடாமலும்

இருந்ததால், விசுவாசம் தைரியம் ஞானம், இச்சையடக்கம்,பொறுமை, தேவபக்தி, சகோதரசிநேகம், சாந்தகுணம், பெருந்தன்மை, அன்பு ஆகிய ஆவியின் கனிகளை தரித்துக்கொள்ள முடியாமற்போயிற்று.

இவர்கள் சரியான பயிற்றுவிப்பாளரைப் பெற்றிருக்கவில்லை, ஆதலால் கர்த்தருடைய வார்த்தையை தவறாகப் புரிந்துகொண்டு, தவறான புரிந்துகொள்ளுதலை அடைந்தனர் என்பதையும் ஒத்துக்கொண்டாகவேண்டும். இருந்தபோதிலும், அவரது உண்மையான பிள்ளைகளாயிருப்பின், தேவன் இவர்களுக்கு வழிகாட்டுவார் என்ற விசுவாசத்தை நாம் உடையவர்களாயிருந்து, உபத்திரவங்களின் மூலமாக நேரிய நிலைப்பாட்டை எடுக்கும்படி நடத்தப்படுவார்கள்.

சிறுமந்தைக்குரிய ஆவிக்குரிய வளர்ச்சிக்கொப்பான நிலையை, திரள்கூட்டத்தார் அடைவார்கள் என்று வேதவசனங்களை தவறாகப் புரிந்துகொள்ளக்கூடாது. தேவன் தம்முடைய சிருஷ்டிகள் ஒவ்வொன்றிலும் பரிபூரண நிலைப்பாட்டை மட்டுமே உடையவராயிருக்கிறார் என்பதே உண்மை. ஆனால் அநேகர், எல்லாமே சாதகமாயிருக்கும்போது மாத்திரமே கர்த்தருக்கும், அவருடைய நீதிக்கும் உண்மையுள்ளவராயிருக்கின்றனர் என தமது வாடிநக்கையில் காண்பிக்கின்றனர். நெருக்கமான வழி மிகக்கடினமாகவும், உயரே செங்குத்தாகவும், கரடுமுரடாகவும் இருப்பதனால் மட்டுமே முன்னேறிச்செல்ல தைரியமின்றி இருந்தனர். ராஜரீக ஆசாரியக்கூட்டத்தாரில் பங்குபெற கர்த்தர் நியமித்திருக்கிற அடையாளக்குறியீடாகிய – அன்பு மற்றும் வைராக்கியத்தை வெளிப்படுத்துவதில் அவர்கள் தோல்வியடைந்தனர்.

தேவன் தேவதூதரிடமிருந்து என்ன எதிர்பார்த்தாரோ அதைக்காட்டிலும் அதிகமாக திரள்கூட்டத்தாரிடமிருந்து எதிர்பார்ப்பதில்லை என்று நாம் நம்புகிறோம். எவ்வாறெனில், சாதகமான சூழ்நிலைகளிலிருக்கும்போது, என் குழந்தையாக இருக்கவும், எனக்கு இசைவாக ஜீவிக்கவும் முன்னுரிமை கொடுக்கிறான். அவன் பாவத்தில் ஜீவிக்க நினைப்பதில்லை, என் நாமத்தை மறுதலிப்பதைக்காட்டிலும், துன்புற்று மரிக்க தயாராயிருக்கிறான். திரள்கூட்டத்து வகுப்பாருக்கு இப்படிப்பட்ட பரீட்சை இருக்குமானால், இந்த சுவிசேஷயுகத்தில் கடந்த காலங்களில்இந்த உண்மைத்தன்மையின் அளவை நிரூபித்துக் காட்டினோர் பத்து லட்சத்துக்கும் மேற்பட்டோராயிருப்பர். இறுதிப் பரீட்சைக்குட்படுத்தப்படும்போது இவர்களில் சிலர், ஒருவேளை இரத்த சாட்சிகளாகக்கூட இருக்கக்கூடும்.

## எதிர்ப்பு, ஆசீர்வாதமாக மாற்றப்பட்டது

தங்களை அர்ப்பணித்தோரில் கணிசமான எண்ணிக்கையுடையோர் இன்னும் பாபிலோனிலேயே இருக்கிறார்கள் என்று நாம் நம்புவதற்கு நல்ல காரணமுண்டு என்று நாம் எண்ணுகிறோம். ஆயினும் இதை நாம் அறிவில்லை. நாம் அர்மகெதோன் யுத்தம் நடப்பதற்கு அருகாமையில் இருக்கிறோம். பாபிலோன் கவிடிநக்கப்படும் நேரத்துக்கு சமீபமாக இருக்கிறோம். மாபெரும் பரிசை வெற்றிகொள்வதற்கு மிகவும் காலதாமதமான போதிலும் இந்த வகுப்பார் கேட்டு வெளியேவரும் நோக்கத்திற்காக, சத்திய செய்தியை முடிந்தளவு பரவலாக கொண்டுசெல்ல நாம் தேடிக்கொண்டிருக்கிறோம். வெளிப்படுத்தல் 19ம் அதிகாரத்தில் அவர்கள் கணிசமான எண்ணிக்கையுடையோராக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பாபிலோன் விழுகையின்போது அந்நேரத்தில் விடுவிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை திரளானகூட்டமாக இருக்கும் என்றும், அவர்களது சத்தங்கள் திரளான தண்ணீர்களின் சத்தத்தைப்போல் இருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

**R5412 : page 69**

தற்காலத்தில் பெயர்சபைகளில் உள்ள பெருந்திரளானோரது சிந்தைகள் படிப்படியாக அதிகதிகமாக சத்தியத்துக்கென்று விழிப்பாயிருப்பதாக நாம் நம்புகிறோம். பல்வேறு பிரசங்க மேடைகளில், சத்தியம் எதிர்ப்புக்குள்ளானபோதிலும், ராஜ்யத்தைக் குறித்த சுவிசேஷத்தின் அநேக காரியங்கள் வெளிப்படையாக தெரியப்படுத்தப்படுகின்றன. இந்த செய்திகள் இந்த வகுப்பாரில் சிலருக்கு அறிவைப் புகட்டவும், விழிப்புணர்வூட்டுதலையும் ஏற்படுத்தும். இந்த சத்தியங்களை எடுத்துரைப்போரில் சிலர் பொறாமையினாலும், வஞ்சகத்தினாலும் எடுத்துரைத்தாலும், சுவிசேஷத்தின் செய் தி பிரசங்கிக்கப்படுகிறது(பிலிப்1:15–18). இவ்வாறு சில குறிப்பிட்ட சத்தியங்களால் அநேகரது கவனம் ஈர்க்கப்பட்டு, அழைக்கப்படுகின்றனர். ஆனால் நம்மால் சந்திக்கமுடியாத அநேகருக்கு இந்த சத்தியங்களை ஒருபோதும் கொடுக்க முடிவதில்லை.

உதாரணமாக, பெயர்சபையே பாபிலோன் என்று நாம் நம்புவதை, இந்த ஊழியக்காரர்களில் சிலர் சுட்டிக்காட்டுகின்றனர். மற்றவர்களோ, நம் கர்த்தர் தம் இரண்டாம் வருகையில் தற்போது

பிரசன்னமாகியிருக்கிறார் என்றும், தம் சம்பத்துக்களை கூட்டிசேர்க்கிறார் என்றும் நாம் நம்புவதைப்பற்றி குறிப்பிடுகின்றனர்(மல்கி3:17). வேறு சிலரோ, அக்டோபர் 1914இல் புறஜாதியாரின் காலங்கள் முடிவுறுவதை நாம் நம்புவதாக தெரிவிக்கின்றனர். இந்த சத்தியங்கள் அனைத்தும் அவதூறான வழியில் அவர்களால் பேசப்படுகிறது. ஆனால் இக்காரியங்களில் அநேகமானவற்றை கர்த்தர் தம் ஜனங்களது நன்மைக்கேதுவாக மாற்றுவாரானால், நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

சில காலத்துக்குமுன்னர், நமக்கு பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தின ஒரு சம்பவம், ஒரு நாளிதழில், ஒருநபர், செடீநுதிப்பிரசுரத்தின் மூலமாக முதன்முதலாக சத்தியஅறிவை அடைந்ததாக நம்மிடம்கூறினார். முற்ற மனிதரோ, ''நாம் அந்திக்கிறிஸ்து'' என்று தன் போதகர்மூலமாகக் கேள்விப்பட்டதாகவும், அந்த அந்திக்கிறிஸ்து எப்படி இருப்பார் என்று காணவிரும்பி, எங்களைக் காணவும் எங்களது செய்தியை கேட்கவும் வந்து, சத்தியத்தைஅடைந்தார், அவதூறான வார்த்தைகளின் மூலமாக அவருக்கு சத்தியம் கிடைக்கப்பெற்றது. ஆகவே கர்த்தருடைய செய்தி சென்றுசேரவேண்டும் என்ற இலக்கை நாம் உடையோராய் இருக்கவேண்டும். சில விநோதமான காரியங்கள் நமக்கு நேர்ந்தாலும், நாம் தூற்றப்பட்டாலும், கொடிதான உபத்திரவங்களைக் கடந்துசென்றாலும், இதை புதுமையென்று நாம் எண்ணவேண்டாம். அவரது மகிமை வெளிப்படும்போது, நாம் சொல்லொண்ணா மகிடிநச்சியடையும்படிக்கு, கிறிஸ்துவோடுகூட துன்பப்படுவதற்கு தகுதியானவர்களென்று எண்ணப்பட்டதற்காக நாம் சந்தோஷப்படுவோமாக 1பேதுரு4:12–14; எபிரேயர்10:32,33.

——————————————